

Vol.26 | No. 8 | August 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## St. Alphonsa Shrine Feast, Nagercoil
## Diocesan Level Pilgrimage and Holy Mass, 31/08/2022







*Kurusady Blessing, Karode, 16/07/2022*



*Golden Jubilee, Mangarai, 30/07/2022*



*St. Alphonsa Nadaipayanam, 23/07/2022*

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 No :8 AUGUST 2022



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் - திருமுகம் | 08 |
| மறைக்கல்வி | 12 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 15 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 16 |
| இல்வாழ்வு இயக்கம் | 19 |
| வின்சென்ட்-தே-பவுல் சபை | 22 |
| சமூக சேவை சங்கம் (KKSSS) | 24 |
| TYES | 27 |
| மறைமாவட்ட செய்திகள் | 28 |
| மறைவட்ட செய்திகள் | 32 |
| Bishop's Engagements | 43 |



## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**Mr. Jesin Joseph**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Jesin J Joseph**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/136/2022**

**31 July 2022**

**Dear Readers,**

Greetings from Bishop's House, Thuckalay!

On 4 August, we keep the feast of St John Mary Vianney. As patron of all priests, especially of the diocesan priests, the feast is a suitable occasion for us to reflect upon the spirituality of the diocesan priest. The vocation of diocesan priests consists in their participa¬tion in the ministerial priesthood of Christ through the sacrament of Holy Orders, grounded within the context of service to a particular diocese. This simplicity of their spirituality, unlike that of a religious priest, does not denote a lack, but a certain universality, as the priesthood is not defined by any one culture or historical period.

When we look at the vocation of a religious priest, in contrast to that of a diocesan priest, is it thought of primarily as the commitment to a community and a specific style of spirituality and way of life. For priests who belong to a religious congregation, it can be argued that their priesthood itself is a secondary, though very important facet of their vocation - a sort of a 'call within a call.' Even in specifically clerical orders, men are ordained only after they have made their solemn or final profession.

The term 'diocesan' categorically comes from the root word diocese - a district or see under the supervision of a bishop, and is divided into parishes. Etymologically, the word diocese denotes 'administration.' It signifies management of a household, and hence, administration in general. Diocesan stands in contrast with a religious congregation. It refers to a group of priests tasked to

pastor a particular church or parish. Thus, a diocesan priest is basically tasked to be a shepherd of his local church or parish in the mould of the one and only Good Shepherd, Our Lord Jesus Christ.

We can delineate the spirituality of a diocesan priest under three heads, namely, Eucharistic, Pastoral and Marian.

***Eucharistic Basis for the Spirituality of a Diocesan Priest***

In 1983, addressing the US bishops in Rome during their ad limina visit, St John Paul II said: “The spirituality of all diocesan priests is linked to the Eucharist. Here they obtain the strength to make the offering of their lives together with Jesus, high priest and victim of salvation. Through the Eucharistic sacrifice, celi¬bacy is confirmed. From the cross, the Lord speaks to all his priests, inviting him to be, with him, signs of contradiction.”

The centrality of the Eucharist in the life of the diocesan priest is apparent. The Eucharistic celebration is a very important element in his life. He celebrates it every day and through this celebration, he is able to offer praise and worship to God and be in daily communion with his parish community. In his encyclical Ecclesia de Eucharistia, St John Paul II wrote: “If the Eucharist is the centre and summit of the Church’s life, it is likewise the centre and summit of priestly ministry. For this reason, the Eucharist is the principal and central raison d’etre of the sacrament of priesthood, which effectively came into being at the moment of institution of the Eucharist.”

The Holy Eucharist is the greatest of all the sacraments. Baptism, of course, is a necessary sacrament. As without it, we cannot receive the other sacraments. Yet, despite all the wonderful things the other six sacraments accomplish in the soul, they still are but instruments of God for the giving of grace. But the Holy Eucharist is not merely an instrument for the giving of grace. In it, the actual Giver of grace Himself, Jesus Christ our Lord, is truly and personally present. It is of no surprise, then, that Vatican II clearly

specified that the Eucharist is the source and summit of Christian life and the centre of the Christian community.

The Holy Eucharist is the gift that Jesus Christ makes of himself. It reveals to us, God's infinite love for every man and woman. This wondrous sacrament makes manifest that 'greater' love which led him to "lay down his life for his friends" (Jn 15:13). Jesus did indeed love them "to the end" (Jn 13:1). In the same way, Jesus continues, in the sacrament of the Eucharist, to love us to the end, even to the extent of offering us his body and his blood.

The theology of the Eucharist is filled with meaning. There are numerous ways the Eucharist is linked to dioce¬san spirituality. The three key tenets of the Eucharistic theology, namely, presence, sacrifice and communion can also help us to understand the Eucharistic spirituality of the diocesan priest.

Presence: The Eucharist is the primordial sacrament of Christ everlasting presence here on earth. Jesus promised that the disciples that he would be with them always until the end of times. Christ's perpetual presence is made manifest in the holy mass where, according to the Council of Trent, Jesus is truly, really and wholly present. Diocesan spirituality signifies that the diocesan priest is to make Christ's presence real, perpetual and dynamic. As we were always told when we were seminarians, people should always see Christ in us. If they fail to see Jesus in us, it is because we are blocking his way. That is why we have to always step aside so that Jesus can be seen and not to ourselves. St Teresa Kolkata, during the First Worldwide Retreat for Priests in Rome in 1991, exhorted the priests: "Dear priests of God, give us Jesus, only Jesus, always Jesus."

***Sacrifice:*** When we say that the diocesan spirituality has to be Eucharistic, it implies that the spiritual life of a diocesan priest must be patterned after the Lord Jesus who sacrificed his very life for the salvation of many. This means that a diocesan priest must continually endeavour to approximate and develop the special character of Christ's Eucharistic act, that is, self-sacrificing love. The

Eucharistic celebration must constantly remind diocesan priests that his priesthood is not to be a source of livelihood but an act of offering himself for the spiritual nourish¬ment and an instrument of salvation for his parish community.

***Communion:*** St John Paul II, in his Encyclical Ecclesia de Eucharistia, points out the relationship between Eucharist and communion. He spoke of the memorial of Christ as "the supreme sacramental manifestation of communion in the Church." The unity of ecclesial communion is concretely manifested in the Christian communities and is renewed at the celebration of the Eucharist, which unites them and differentiates them in the particular Churches. The fact that the one Eucharist is celebrated in each diocese around its own bishop helps us to see how those particular Churches form communion with the universal Church.

Thus, the Eucharist is the sacrament of unity. The ultimate aim of the Eucharistic celebration is the building up of the Christian community. An important element for the spirituality of the diocesan priest springing forth from the Eucharist is unity. For the diocesan priest, it entails his total availability to the diocese and to the flock through his faithful promises of obedience and celibacy. Through the Eucharist, the diocesan priest keeps his community united. Thus, he becomes a unifier of his parish community.

Indeed, looking at diocesan spirituality in the perspective of the Holy Eucharist is not only a profoundly theological but also a practical approach to the spirituality of the diocesan priest. Diocesan priests make their daily Mass the heart of the day. They prepare for it by meditating on the readings beforehand, by a spirit of prayer and recollection prior to Mass, by a reverent, sincere celebration of the Mass, and by a period of thanksgiving afterwards. If this could be faithfully done, we are on our way to the spirituality of a diocesan priest, bringing Christ whom they have offered up and received to our people, in our ministry, throughout the day.

### *Pastoral Basis for the Spirituality of a Diocesan Priest*

The diocesan priests are primarily tasked to serve the parish communities, and hence, they are in the forefront of pastoral ministry. Their mission is truly hands-on in their task of service to the Christian community and his spirituality can be said to be both practical and functional.

Bishop Leonardo Medroso of Tagbilaran writes that the spirituality of the diocesan clergy and his effectiveness in the ministry is to be found from the very exercise of his priestly ministry. The priest becomes what he administers. He grows in spirituality according to the way he fulfils his priestly ministry. He becomes holy because he deals with holy things. The Second Plenary Council of the Philippines stressed it when it stated that a ministerial spirituality requires the priest to exercise authentic and truthful ministry. He attunes his heart and demeanour to the meaning of his ministerial actions. He should seek to be an example of one who heeds the Word of God and thus become a light to others.

The diocesan priests are appointed to become the administrator and spiritual caretaker of their communities. In essence, the diocesan priest embodies the shepherding ministry of the Lord Jesus, the one and only Good Shepherd. In order to understand this shepherding or pastoral ministry, we need to reflect on the triple functions of the Church, namely, priestly, prophetic and kingly ministry of the Church.

### *Marian Basis for the Spirituality of a Diocesan Priest*

The Blessed Virgin Mary is the only one true mother, spouse and exemplar of every diocesan priest. With her example and intercession, the Blessed Virgin keeps vigilant watch over the priestly life in the Church. The priests are called to have an ever firmer and more tender devotion to the Virgin Mary and to show it by imitating her virtues and praying to her often. By her fiat, the Blessed Mother accepts in history the Saviour of humankind. In her Magnificat she proclaims the advent of the Mystery of

Salvation, the coming of the Messiah of the poor. The God of the Covenant, whom the Virgin of Nazareth praises in song as her spirit rejoices, is the God who casts down the mighty from their thrones and raises up the lowly, fills the hungry with good things and sends the rich away empty, scatters the proud and shows mercy to those who fear him.

Looking to the heart of Mary, to the depth of her faith expressed in the words of the Magnificat, the diocesan priests are called to renew ever more fully in themselves the awareness that the truth about God who saves cannot be separated from the manifestation of his love of preference for the poor and humble, that love which, celebrated in the Magnificat, is later expressed in the words and works of Jesus. Mary is totally dependent upon God and completely directed towards him by the impetus of her faith. She is the most perfect image of faith, complete surrender on God and total obedience to the will of the Father.

On 15 August, we celebrate the Assumption of Mary. It is one of the four Marian dogmas of the Catholic Church.  The word ‘assumption’ is derived from the Latin word assumptio meaning ‘taking up.’ Pope Pius XII defined it in 1950 in his apostolic constitution Munificentissimus Deus: “We proclaim and define it to be a dogma revealed by God that the immaculate Mother of God, Mary ever virgin, when the course of her earthly life was finished, was taken up body and soul into the glory of heaven.” The day also marks the 75th Independence Day of our country. As we celebrate the Independence Day of our country and sing proudly the national anthem, let us pray with Tagore, saying “Into that heaven of freedom, my Father, let my country awake.” May the Virgin Mary assumed into heaven intercede for all of us!

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

ஆயர் திருமுகம்

**Bishop George Rajendran sdb**
Diocese of Thuckalay

**Pastoral Letter No/GR/ 47/ 2022**

# ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

## புனித அல்போன்சா திருநாள்

இந்தியத் திருநாட்டின் முதல் புனிதையாம் புனித அல்போன்சாவின் திருவிழாவைக் கொண்டாடி மகிழும் இந்நாள்களில் உங்கள் அனைவருக்கும் புனிதையின் விழா வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (லூக்கா. 9:23) என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தைகளுக்கேற்ப வாழவிரும்பி புனித கிளாரா சபையில் கால் பதித்து, ஈசோ வாழ்ந்து காட்டிய அன்பு ஒன்றையே தன் துறவற வாழ்வின் அடித்தளமாய் தனதாக்கிக் கொண்டு கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்ற வார்த்தைப் பாடுகளை வாழ்வாக்கி, புனிதையாக உயர்ந்தவர் புனித அல்போன்சா.

அன்பு செய்ய மட்டுமே அறிந்திருந்த புனித அல்போன்சா பண்பு, பணிவு என்பதற்கோர் சிறந்த சான்று, துறவற ஆன்மீக வாழ்வில் அன்பர் ஈசோவின் பற்றுறுதியும் நம்பிக்கையும் மிகவே கொண்டு வாழ்வின் இன்னல்களை எல்லாம் இன்முகத்தோடு ஏற்று, இன்றும் இறைவனோடு வாழ்ந்து கொண்டிருக்கும் நம் புனிதை தூய வாழ்விற்கு மாபெரும் ஒளி விளக்கு. ஆன்மீக வாழ்வில் தன்னோடு உறவு, பிறரோடு உறவு, உலகோடு உறவு, இறைவனோடு உறவு என்ற விவிலிய மதிப்பீடுகளையும், பிறர் நலம் நாடி, தேவையில் உழல்வோருக்கு தேவையறிந்து உதவுகின்ற உயரிய மனப்பான்மையும், தியாக உள்ளமும் உள்ளவர். இவற்றையெல்லாம் நமக்கு உணர்த்தி ஈசோ மெசியாவின் சீடத்துவ வாழ்வில் நிலைத்து நின்றவர்.

தன்னை வருத்திய நோயின் வலியிலும், "இறைவன் தன் சிலுவையின் ஒரு பகுதியினை எனக்குக் கொடுத்து விட்டதாகவே உணர்கிறேன். அத்தனைத் துன்ப துயரங்களையும், வலிகளையும் மணம் வீசும் மலர்களாகவே ஏற்கிறேன். எனது தெய்வீக வாழ்க்கைத் துணைவனாம் இறைவனும் எனது எண்ணங்களோடு உடன் படுவதாகவே நான் கருதுகிறேன்" எனக்கூறி இறைவனுக்குத் தன்னை முழுவதும் அர்ப்பணித்து முக மலர்ச்சியோடு வாழ்ந்தவர். "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய, அது அப்படியே இருக்கும் மடிந்தால் தான் மிகுந்த பலனளிக்கும்" (யோவான் 12-24) என்ற இறைக்கூற்றை நன்கு உணர்ந்தவராய் இறைவனது விருப்பத்திற்கு முற்றிலும் சாட்சிய வாழ்வு வாழ்ந்தவர். நோயின் வலியிலும் அவர் முகத்தில் புன்னகை மாறியதில்லை.

பொறுமை, பணிவு, இன்முகத்தோடு கூடிய புன்சிரிப்பு, தன்னடக்கம் இவற்றை அணிகலனாகக் கொண்டவர். எவ்விதச் சூழ்நிலைகளிலும் நற்கருணை சந்திப்பதிலும், நற்கருணை நாதரோடு பேசுவதிலும் தணியாத தாகம் கொண்டவராயிருந்தார். அன்னை மரியா மீது அளவற்ற அன்பும் பற்றும் கொண்டு அவர் காட்டிய வழியில் வாழ்ந்து இடைவிடாது செபமாலை செபிக்கும் நற்பண்புகளால் நிறைந்தவர். தனக்கு வந்த வலிகளையும், துன்ப துயரங்களையும், சுமைகளையும் சுகமாகவேக் கருதியவர். இறைவன் மீது அவர் கொண்ட நம்பிக்கை என்றுமே உறுதியாக இருந்தது.

தன்னை இகழ்ந்தவர்களையும் மன்னித்து அன்பு செய்தார். தனது உடைமைகளை எல்லாம் பிறர் உடைமையாகவே கொண்டு வாழ்ந்தார். "தன்னைப் போல் பிறரையும் அன்பு செய்வாயாக" என்ற இறைவார்த்தையைத் தன் வாழ்வில் ஒரு பொழுதும் மாறாதவராக வாழ்ந்தார். அவரை அண்டி வந்து வேண்டி நின்றார் அனைவருக்கும் அருள் வரங்களையும் வளங்களையும் வாரி வழங்கும் வள்ளலாகவே விளங்குகிறார் நம் புனிதை. இறைவனில் இல்லமாம் விண்ணகம் நுழைய ஒரு திறவு கோலாக நமக்குத் துணை நிற்கிறார்கள். அவரது திருவுடலைத் தாங்கி நிற்கும் பரணங்கானம் பார் போற்றும் திருத்தலமாய் இன்று போற்றப் படுகின்றது.

நல்லதோர் துறவுவாழ்க்கை வாழ்ந்து இம்மண்ணில் இறையரசைக் கட்டியெழுப்பிய புனித அல்போன்சாவை 2008 அக்டோபர் 12-ஆம் நாள் திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் புனிதையாகத் திருநிலைப்படுத்தினார். அவர் வாழ்ந்து காட்டிய செப, தவம் மற்றும் தியாக வாழ்வை நமது வாழ்க்கைப் பாடமாக ஏற்று அவர் வழி நடப்போம். தமது எளிய வாழ்வாலும், தியாகத் திருப்பணிகளாலும், ஒறுத்தல் முயற்சிகளாலும் இவ்வுலகில் இறைவனுக்கு

உகந்த வாழ்க்கை வாழ்ந்து விண்ணுலகிலும் இறைவனின் அணி நிறை மணிமுடியாய் விளங்கும் நம் புனிதை வழி இவ்வுலகில் எண்ணற்றோரின் எண்ணிறந்த வேண்டுதல்களை நம் புனிதை நிறைவேற்றிய வண்ணமாய் உள்ளார்கள். புனித அல்போன்சா இறந்த நிமிடத்திலிருந்தே புதுமைகள் புரிந்து கொண்டே இருந்தார். இறப்புச் சடங்கில் கலந்து கொண்டவர்களில் பலர் புனிதையின் உடலை செபமாலையாலும் செப்புத்தகங்களாலும் தொட்டார்கள். முடவன் நடப்பதும், வலிகள் குணமாவதுமாக சுமார் முப்பதுக்கும் அதிகமான புதுமைகள் நடைபெற்றதாக அவரின் வாழ்க்கை வரலாறு குறிப்பிடுகிறது.

புனித அல்போன்சாவின் இறப்புச் சடங்கில் மறையுரையாற்றிய அவரின் ஆன்மீக குரு அருட்தந்தை ரோமளூஸ் இவ்வாறு கூறினார். நம்மைவிட்டு பிரிந்துச் சென்ற இப்புனிதையை நினைத்து கவலையுறத் தேவையில்லை. கண்ணீர் சிந்தவும் தேவை இல்லை. அவரைப்பற்றி நன்கு தெரிந்த வெகுசிலரில் நானும் ஒருவன் என்பதை நினைக்கும் போது நான் பெருமைப்படுகிறன். இன்று அவரது இழப்பை நினைத்து என் மனம் வருந்த வில்லை. மாறாக ஆனந்தம் அடைகிறது. இவ்வலக வாழ்வில் அவர் பட்ட பாடுகள் நிறைவிற்கு வந்துள்ளது என்பதற்காக அல்ல, மாறாக இறைவனிடம் பரிந்து பேச நமக்கொரு புதிய பரிந்துரையாளர் கிடைத்துள்ளார்.

புனித அல்போன்சாவின் இவ்வுலக வாழ்வு துன்ப துயரங்களும் சிலுவைகளும் நிறைந்ததாக இருந்தாலும் இவைகள் தான் இன்றைக்கு அவரிடம் மன்றாடுவோருக்கு விரைவாக கிடைக்கும் நன்மைகளாக, இன்பங்களாக இருக்கிறது. நமது வாழ்விலும் வரும் வலிகளை தாங்குவதற்கான ஆற்றலை கடவுளிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்கிறோம் என்றால் வாழ்க்கை வளமாக இருக்கும் என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

நோயிலும், வறுமையிலும், ஆறுதலும், தேறுதலும் அளித்து பாதுகாத்துப் பராமரித்து வரும் நம் புனிதையிடம் நாமும் ஜெபிப்போம், அடைக்கலமாவோம்! அவர் விழாவில் இணைந்து நற்பேறு பெறுவோம்! அனைத்திற்கும் மேலாக செபமே ஜெயம் என்பதை உணர்ந்து நம் இல்லங்களில் கூடி செபித்து நம் புனிதையின் அருளாசி பெறுவோம்!

புனிதையின் கனவும், பணிவும் நிறைந்த தாய், அன்னை மரியாவை நோக்கிய அவர் செபத்தில் நாமும் இணைவோம்! புனித தாயே! எனதன்பு அன்னையே! உமது மகனுக்கு ஏற்ற உறைவிடமாய் எனது இதயத்தை மாற்றியருளும்! இறைவா! உமது விருப்பத்திற்கேற்ப என்னை மாற்றியருளும், உமது திரு இருதயத்தில் என்னை மறைத்துத் தூய்மையாக்கும். பெருமை

பாராட்டுவதிலிருந்து என்னை விடுவியும். அன்பின் ஜோதியாக என்னை மாற்றும். இவ்வுலகின் வசதிகளும் ஆறுதல்களும் எனக்குக் கசப்பாக மாறட்டும். அன்பு இயேசு உமது அன்பின் ஒளியால் எனது இதயத்தை நிரப்பும். உமது திரு இருதயத்தின் மகிமையின் ஒளியில் என்னைச் சேர்த்தருளும்! இதுவே நம் புனிதையின் இரக்கமும் கனிவும் பணிவும் மிகுந்த மன்றாட்டாகும்.

நமது மறைமாவட்டத்தின் நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல ஆலய திருவிழாவானது இம்மாதம் 22 ம் தேதி முதல் 31ம் தேதிவரை நடைபெறுகிறது. நேற்றைய தினத்தில் புனிதையின் திருத்தலம் நோக்கிய நடைபயணம் நடைபெற்றது. அதில் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வவொரு மறைவட்டங்கள் சார்பாக சிறப்பு நவநாளும் ஆடம்பர திருப்பலியும் நடைபெறுகிறது. ஜூலை மாதம் 31ம் தேதி மறைமாவட்டத்திலுள்ள அனைத்து இறைமக்களும் ஒன்றிணைந்து புனித அல்போன்சாவின் பரிந்துரை வழியாக நாம் பெற்றுக் கொண்ட அனைத்து நன்மைகளுக்குமாக நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கவிருக்கின்றோம். அந்தநாளில் அனைத்து அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் இறைமக்களும் தவறாமல் கலந்து கொண்டு ஜெபித்து இறையாசீர் பெற்றுச் செல்ல அனைவரையும் அழைக்கிறேன். வழக்கமாக நமது பங்குகளில் நடைபெறும் புனித அல்போன்சா நவநாளிலும் திருப்பலியிலும் இயன்றவர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும் உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

புனிதையின் விழாவைக் கொண்டாடி மகிழும் நாம் அவர் வழி இறையாசி நிறைவாகப் பெறுவோம். அவர் வழியாக இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும், உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக !

ஆயர் இல்லம்
24/07/2022

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை ஜூலை 24, 2022 ஞாயிறு அனைத்து பங்குகளிலும் திருப்பலியில் நற்செய்திக்குப்பின் மறையுரைக்குப் பதிலாக வாசிக்கவும்.



# CATECHISM மறைக்கல்வி

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***மறைக்கல்வி ஆண்டுவிழா***

2021 – 2022 ஆம் மறைக்கல்வி ஆண்டுவிழா 2022 ஜுலை 17 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 2.30 மணிக்கு படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலய அரங்கில் வைத்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையிலும் குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் மற்றும் இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வின் துவக்கமாக பாலப்பள்ளம் மறைக்கல்வி மாணவர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். தொடர்ந்து இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர அவர்கள் ஆண்டுவிழாவிற்கு தலைமை தாங்க வந்திருக்கும் ஆயர் அவர்களையும் குருகுல முதல்வர் அவர்களையும் மற்றும் அனைவரையும் வாழ்த்தி வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து ஆயர் அவர்கள் குத்து விளக்கேற்றி ஆண்டுவிழாவை துவக்கி வைத்தார். இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் கடந்த 3 வருடங்கள் மறைக்கல்வியின் இயக்குநராக சிறப்பாக பணியாற்றிய அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்களை வாழ்த்தி நன்றி கூறினார். மேலும் மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றி 25 மற்றும் 40 வருடங்கள் ஜூபிலி கொண்டாடும் ஆசிரியர்களுக்கு திரு. சோனிக் ரீகன் ஆசிரியர் அவர்கள் வாழ்த்தி அறிமுகம் செய்து வைக்க ஆயர் அவர்களால் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் ஜூபிலி கொண்டாடும் ஆசிரியர்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினார். மேலும் இவ்விழாவின் போது தமிழாக்கம் செய்யப்பட்ட 5, 9 வகுப்பு நூல்களும் திவ்விய நற்கருணை பெறுவதற்கான தயாரிப்பு நூலும் ஆயர் அவர்கள் வெளியிட 5 ஆம் வகுப்பு நூலை அருட்சகோதரி. ஜெயின் மரியா அவர்களும் 9 ஆம் வகுப்பு நூலை திரு. விஸ்வநாதன் தலைமையாசிரியர் அவர்களும் திவ்விய நற்கருணை பெற்றுக்கொள்வதற்கான தயாரிப்பு நூலை அபிஜித் என்ற மாணவனும் பெற்றுக் கொண்டனர். பின்னர்

ஆயர் அவர்கள் தலைவர் உரையில் அனைவரையும் வாழ்த்தி மாணவர்கள் விசுவாசத்தில் ஆழப்படுத்த ஆசிரியர்கள் மறைக்கல்விப்பணியை தொய்வின்றி முழுமையாக முன்னெடுக்க வேண்டும் என்று உரை நிகழ்த்தினார்

விழாவின் இடையிடையே பல்வேறு மறைக்கல்வி நிலையங்களிலிருந்து நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளான இறைவார்த்தை சொல்லுதல், குழுப்பாடல், சொற்பொழிவு, மார்க்கங்களி, குழுநடனம், ஆகியவையும் அறிக்கையும் இடம் பெற்றன. தொடர்;ந்து மறைமாவட்ட விவிலிய வினாடி வினாப் போட்டியில் முதலிடம் இரண்டாமிடம் மூன்றாமிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகையும் சான்றிதழும் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களாலும், குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்களாலும் வழங்கப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை மகேஷ் அவர்கள் ஆயர் அவர்களுக்கும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை அவர்களுக்கும் அருட்தந்தையர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் நன்றி கூறினார். இறுதியில் பாப்பரசர் கீதத்துடன் ஆண்டு விழாவானது இனிதே முடிவுற்றது. பின் அனைவருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.



3 ஆண்டுகள் மறைக்கல்வியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து தற்போது மறைபரப்புப் பணிக்காக வெளிநாடு செல்லவிருக்கும் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். அருட்தந்தையின் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

மறைக்கல்விப் பணிக்காக முழுமையான ஒத்துழைப்பு தருகின்ற அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் ஊக்குவிப்பாளர்கள் தலைமையாசிரியர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் இறைமக்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.

25 மற்றும் 40 வருடங்கள் மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றி இந்த வருடம் வெள்ளி விழா மற்றும் ரூபி விழா கொண்டாடும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்.

இந்த வருடம் வெள்ளி விழா மற்றும் ரூபி விழா கொண்டாடும் ஆசிரியர்கள்

1. Mrs. Maria Reginal (40 Years) - Muzhucode
2. Mr. Wilson C (40 Years ) - Mukkuttukal
3. Mrs. Elizabeth Rani (25 Years ) - Paraicode
4. Mr. Thomas Panner Selvam (25 Years )- Soosaipuram
5. Mrs . Jaquline (25 Years ) - Palappallam
6. Mrs. Mary Glory (25 Years ) - Palappallam
7. Mr. Sunil PR (25 Years ) - Thettiyode
8. Mr. Vijaya Rajan (25 Years ) - Manjalumoodu
9. Rev. Sr. Tessy SABS (25 Years ) - Kulasekharam
10. Mr. Vincent (25 Years ) - Palukal
11. Rev. Sr. Merina SH(25 Years ) - Palukal
12. Mrs. Glory (25 Years ) - Kazhuvanthittai
13. Rev. Sr. Rosia FCC (25 Years ) - Mezhacode
14. Rev. Sr. Jesina FCC(25 Years ) - Mezhacode
15. Mr. Abraham. G (25 Years ) - Karode
16. Mr. Lawrance (25 Years ) - Mangarai
17. Mrs. Baby (25 Years ) - Pallikkonam

இயக்குநர்
அருட்தந்தை அபிலாஷ் சேவியர்

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***"சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில், இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. இறையாட்சியைச் சிறு பிள்ளையைப்போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மாற் 10: 14)***

09.07.2022 அன்று மதியம் 2 மணியளவில் இயக்குனர் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் ஒரு வருட நிகழ்வுகள் கலந்தாலோசிக்கப்பட்டது. ஜூலை 17 அன்று அனைத்துப் பங்குகளிலும் குழந்தை ஈசோ இயக்கம் ஆரம்பமானது. குழந்தைகளுக்கு பங்குத்தந்தையர்கள் உத்திரியம் அணிவித்து ஆசீர்வதித்து தொடக்கி வைத்தனர்.

கூட்டத்தில் ஏராளமான புதிய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டது, குழந்தை ஈசோ இயக்க புதிய பாடதிட்டம் திட்டமிடப்பட்டு செயல் படுத்தப்படும், ஒவ்வொரு பங்குளிலும் நடைபெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் இயக்குனர் அவர்களால் பார்வையிடப்படும், குழந்தைகளின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்க்காக கலைவிழா, தியானம் கருத்தரங்கு போன்ற நிகழ்வுகள் நடைபெறும். மறைவட்ட அளவில் Whatsapp Group தொடங்கப்பட்டு புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மறைமாவட்டநிகழ்வுகள் அனைத்தும் Whatsapp Group பகிர்தளிக்கப்டுகிறது

இப்படிக்கு
அருட்தந்தை அனில் ராஜ்
இயக்குநர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர்

இயக்கம் SMYM

### மறைமாவட்ட பெறுப்பாளர்கள் கூட்டம் 09/07/2022

ஜூலை மாதம் 9 ம் தேதி அன்று தக்கலை மறைமாவட்ட smym இயக்கத்தின் செயற்குழு கூட்டமானது Google Meet இணையதளம் வழியாக இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் மாலை 7:30 மணியளவில் நடைபெற்றது. இயக்குநர் தந்தை அவர்கள் பேசும் போது தலைவர் என்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அழைப்பு என்றும், அந்த அழைப்பிற்கு ஏற்றவாறு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும், நம்முடைய வாழ்க்கை முறை இளையோர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் எனவும் கூறினார். மேலும் திருப்பலி போன்ற அடிப்படை விசுவாச பக்தி முயற்சிகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து அதில் முழுமனதுடன் பங்கு ஏற்க வேண்டும் எனவும் கூறினார். அதை தொடர்ந்து முக்கியமாக மூன்று முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. ஜூலை 23 ஆயர் இல்லத்தில் இருந்து புனித அல்போன்சா திருத்தலம் நோக்கி நடைபயணம் நடைபெறும். அதில் எல்லா பங்குகளில் இருந்தும் முழுமையாக இளைஞர்கள் பங்கேற்க முயற்ச்சி எடுக்க வேண்டும்.

2. ஜூலை மாதம் 30 ம் தேதி நடைபெறும் வேலை வாய்ப்பு முகாமில் பொறுப்பாளர்கள் இயக்குநர் தந்தையோடு எல்லா செயல்பாடுகளில் உடன் இருந்து செயல்பட வேண்டும் என கூறினார்.

3. ஆகஸ்ட் மாதத்தில் இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்ச்சி வகுப்புகள் நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதன் பின் தந்தை அவர்களின் இறுதி ஆசிருடன் கூட்டம் நிறைவு பெற்றது.

### மறைமாவட்ட பொறுப்பாளர்களுக்கான பயிற்சி 13/07/2022

ஜூலை மாதம் 13 ம் தேதி அன்று தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்க பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து மதியம் 2 மணியளவில் நடைபெற்றது. இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சி வகுப்பினை நடத்தினார். இதில் தனிமனித சுதந்திரம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் வகுப்புகள் நடத்தினார். மேலும் நாம் எதற்காக அழைக்க பெற்றிருக்கிறோம். நம்முடைய அழைப்பு சமூக மாற்றத்திற்கு ஒரு முன் மாதிரியாக அமைய வேண்டும் எனக் கூறினார். இளையோர்கள்

தங்களுடைய வாழ்க்கையில் பொறுப்பு மிக்கவர்களாகவும் விலக வேண்டிய இடத்தில் விலகி நிற்கவும் தங்களுடைய வாழ்க்கையில் முடிவுகளை சரிவர சிந்தித்து செயல்படவும் வேண்டும் எனவும் வகுப்புகள் நடத்தினார்.

### *புனித அல்போன்சா திருத்தல நடைப்பயணம் 23/07/2022*

தக்கலை மறைமாவட்ட SMYM இயக்கம் சார்பாக நாகர்கோவில், புனித அல்போன்சா திருத்தலம் நோக்கி நடைப்பயணம் நடைபெற்றது. ஜூலை மாதம் 23 தேதி காலை 6:30 மணி அளவில் தக்கலை ஆயர்



இல்லத்திலிருந்து பயணம் ஆரம்பமானது. காலையில் அனைவருக்கும் தேநீர் மற்றும் காலை உணவு வழங்கப்பட்டது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் அருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் ஜெபம் செய்து ஆசியுரை வழங்கி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தக்கலை மறைமாவட்டத்தை சேர்ந்த இளைஞர்களும் இறைமக்களும் திரளாக கலந்து கொண்டனர். அதைப்போன்று சூசைபுரம் மறைவட்டத்தை சார்ந்த இளையோர்கள் மற்றும் இறைமக்களும் தங்கள் பங்குகளில் இருந்து விடியற்காலையில் நடைபயணமாக நாகர்கோவில் அல்போன்சா திருத்தலம் வந்தடைந்தனர். காலை 11 மணி அளவில் அருட்தந்தை ஜோமோன் மங்கலமடத்தில் அவர்கள் நவநாள் நடத்தினார். அதைத் தொடர்ந்து இளைஞர் இயக்க இயக்குநர் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் ஆடம்பர கூட்டுத் திருப்பலி நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆலய பங்குதந்தை சனில் மற்றும் உதவி பங்குதந்தை டோஜி அவர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

இவண்

மெரின் சுஜித், செயலர்


# புனித தோமையார் திருத்தொண்டுத் தளம் மீனச்சல்

படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயத்தின் ஒருபகுதியான மீனச்சல் பகுதியை ஒரு திருத்தொண்டு தளமாக மாற்ற வேண்டுமென்ற அப்பகுதி மக்களின் நீண்டகால கனவு தற்பொழுது நனவாகியுள்ளது. கூட்டத்திற்கு முன்னோட்டமாக வீடு சந்தித்தல் உறவியத் தலைவி திருமதி. விஜியம்மா மற்றும் திரு. மணி தலைமையில், சீரோமலபார் திருச்சபையின் பிரேசிததாரம் திரு. மரியதாஸ் மறைமாவட்ட திருத்தொண்டுப் பணிக்குழுவின் செயலர் திரு. எட்வின்சன் ஆகியோர் முன்னிலையில் நடந்தது.

மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB ஆண்டகையின் அனுமதியில் பெந்தேகோஸ்தே திருநாளான 05.05.2022 ஞாயிறு மாலை 5 மணிக்கு மீனச்சல் திரு. சுகுமாரன் அவர்கள் வீட்டில் வைத்து படந்தாலுமூடு மறைவட்ட ஆலய பங்குத்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அடிகளார் தலைமையில் முதல் செபக்கூட்டம் நடைபெற்றது தொடர்ந்து நடைபெற்றக் கூட்டத்தில் பேரருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் இந்தப்பகுதி புனித தோமையார் உறவியப் பகுதியாக வருவதால் 'புனித தோமையார் திருத்தொண்டுத் தளம்' என புதிய மறைத்தளமாக அறிவிப்புச் செய்தார். செயலர் திரு. எட்வின்சன் அனைவருக்கும் நன்றி கூறினார். ஜூலை 3-ம் தேதி 'துக்ரான' திருவிழாவை பவனியாக கோலாகலமாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டது. நிறைவாக அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் உறவிய மக்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



# இல்வாழ்வு இயக்கம்



உலகிற்கு ஒளியாய் வாழ்வுக்கு வழியாய் திகழுகின்றது திருக்குடும்பம். அத்திருக்குடும்பத்தை பின்பற்றி இல்வாழ்வு இயக்கம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 'தாழ்நிலையில் இருந்த தம் அடியாரைத் தயையுடன் கடைக்கண் நோக்கினார்' என்ற இறைவசனத்திற்கு இணங்க துன்பப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்ற குடும்பங்களை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல ஒரு வழிகாட்டியாகவும் அனைத்து குடும்பங்களிலும் மகிழ்ச்சியான குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்ற நோக்குடன் இவ்வியக்கம் செயல்பட்டு வருகிறது.

குடும்பங்களை இறைவழியில் நடத்த குடும்ப சந்திப்பு புனித மத்தேயு ஆலயம் அண்ணிக்கரை மற்றும் அமல மரியா ஆலயம் சீனிவிளையில் நடத்தப்பட்டது. சுமார் 45 குடும்பங்களை சந்தித்து ஆன்மீக முறையில் அறிவுரை வழங்கப்பட்டது.

***மாதர் ஜோதிஸ் இயக்கம்***

மார்த்தோமா மாத கொண்டாட்டத்தை முன்னிட்டு தாய்மார்களுக்கான மறைமாவட்ட அளவிலான மார்கம்களி போட்டி ஜூலை 9 ம் தேதி



காலை 11 முதல் மாலை 4 மணி வரை ஆசீர் ஆடிட்டோரியம் கல்லுவிளையில் வைத்து நடைபெற்றது. இதில் 18 குழுக்கள் நடனம் ஆடின. முதல் பரிசு புனித தோமையார் ஆலயம் நெட்டாவைச் சார்ந்தவர்களுக்கு கிடைத்தது. இரண்டாவது பரிசு தூய மரியன்னை ஆலயம் தக்கலையில் உள்ள தாய்மார்களுக்கும் திருக்குடும்ப ஆலயம் மூக்கூட்டுகல்லைச் சார்ந்த தாய்மார்களுக்கு கிடைத்தது. பரிசு பெற்ற குழுக்களுக்கு மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்து கொள்கின்றோம்.

இல்வாழ்வு இயக்குநர் தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் தலைமையில் ஜூலை 10 ம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கத்தினர் சார்பாக புனித சவேரியார் ஆலயம் வாறுதட்டில் உள்ள தாய்மார்களை சந்தித்து 2 மணி நேரம் கலந்துரையாடினார். இதில் சுமார் 30 தாய்மார்கள் கலந்துகொண்டனர்.

ஜூலை 16 ம் தேதி 2022-2023 ஆண்டிற்கான மாதர் ஜோதிஸ் தொடக்க விழா மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமையில் நடைபெற்றது. மேதகு ஆயர் அவர்கள் விழாவை குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். அப்போது



பேசுகையில் மாதர் ஜோதிஸ் இயக்கம் வளர வேண்டும் எனவும் போட்டிகளில் அதிகமானோர் பங்கேற்க வேண்டும் என்றும் கூறினார்கள். மேலும் 2022 - 2023 ஆண்டிற்கான மையக்கருத்தை ஆயர் அவர்கள் வெளியிட்டார். இவ் ஆண்டிற்கான மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட தலைவர் இவ்விழாவில் வைத்து தெரிந்து எடுக்கப்பட்டார். திருமதி ஜூலியட் அவர்கள் மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் தலைவியாகவும் திருமதி ராஜிதா அவர்கள் துணைத் தலைவியாகவும் தெரிந்து எடுக்கப்பட்டார். மேதகு



ஆயர் அவர்கள் பெறுப்புகளை வழங்கினார்கள். பொறுப்பேற்ற மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட பெறுப்பாளருக்கு மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

சர்வதேச அளவிலான மாதர் ஜோதிஸ் கூட்டம் ஜூலை 18 மற்றும் 19 ம் தேதி திருச்சூரில் (ஆம்பலுரில்) வைத்து நடைபெற்றது. இதில் இயக்குநர் தந்தை, துணை இயக்குநர், மாதர் ஜோதிஸ் தலைவி, மாதர் ஜோதிஸ் துணை தலைவி மற்றும், மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### *தந்தையர் நல்வாழ்வு இயக்கம்*

இயக்குநர் தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் தலைமையில் ஜூலை 10 ம் தேதி 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான தந்தையர் நல்வாழ்வு இயக்க தொடக்க விழா புனித சவேரியார் ஆலயம் வாறுதட்டில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவில் அருட்தந்தை பிரின்டோ அவர்களும் இயக்குநர் தந்தை அவர்களும் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவில் 20 தந்தையர்கள் கலந்துகொண்டனர்.

### *திருமண ஆயத்தப் பயிற்சி*





திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது ஜூலை 8 மற்றும் 9 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் 23 பேர் பங்கேற்றனர். அடுத்த திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது ஆகஸ்ட் 12 மற்றும் 13 ம் தேதி கல்லுவிளை இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து நடைபெறும் .

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்
இயக்குநர்




# வின்சென்ட்-தே-பவுல் சபை

***தக்கலை மத்திய பேரவை***

தக்கலை மத்திய சபையின் வெள்ளி விழாவையொட்டிய 'திருவிவிலிய ஒளிச்சுடர்' படந்தாலுமூடு வட்டார சபையிலிருந்து 10-07-2022 முதல் மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட ஆலயங்களில் பவனியாக எடுத்து செல்லப்பட்டு செபம் நடந்து வருகிறது. ***திட்டம் வழங்குதல்***

தக்கலை மத்திய பேரவையின் சூசைப் புரம் வரட்டர சபைக்குட்பட்ட பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் செயல்படும் 3 கிளை சபைகளின் சார்பாக சுழற்சி திட்டம் வழங்கும் நிகழ்ச்சி ஆன்மீக இயக்குனர் அருளட்தந்தை ஜாண்பால் தலைமையில் 10.06.2022 காலை 9.30 மணிக்கு நடந்தது. பங்குதந்தை தலைமை உரை நிகழ்த்தி தொடங்கி வைத்தார். தொடர்ந்து சிறப்பு விருந்தினராக SABS தலைமை சகோதரி பங்குகொண்டு திட்டத்தை வழங்கினார்.



கிறிஸ்து ராஜா கிளை சார்பில் 13 நபர்களுக்கும் புனித ரீத்தா கிளை சார்பில் 16 நபர்களுக்கும் புனித இக்னேசியஸ் கிளை சார்பில் 3 நபர்களுக்கும் தலா 4000 வீதம் ரூபாய் 128000 வழங்கபட்டது. கூட்டத்தில் வரவேற்புரையை சகோ. ஜஸ்டின் தாஸ் அவர்களும் நன்றியுரையை சகோ. தோமஸ் அவர்களும் நிகழ்த்தினர். மத்திய சபை சார்பில் துணை தலைவர் சகோ. ஐயத்துரை அவர்கள் கலந்து கொண்டார்.

மஞ்சாலுமூடு வட்டரசபைக்குட்பட்ட முக்கூட்டுக்கல் திருக்குடும்ப கிளை சபையின் சார்பாக ஒரு ஏழை குடும்பத்திற்கு வீட்டின் மேற்கூரை போட ரூ 10000 ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சுபின் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.



சூசைபுரம் வட்டார சபைக்கு உட்பட்ட மாதாபுரம் புனித தோமையார் பெண்கள் கிளைச்சபையில் "ஆடு வழங்கும் திட்டம் 24.07.2022 அன்று சுழற்சி முறையில் (சுழற்சி-2) ஒரு பயனாளிக்கு ஆட்டுக்குட்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வட்டார சபைத்தலைவர் சகோ.பிரபு, மத்திய சபை செயலர் சகோ.சோனிக்ரீகன், கிளைச்சபை தலைவர் சகோதரி.விஜயா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்



தகவல் சேகரிப்பு

D. P. ஷாஜி

தகவல் தொடர்பு அலுவலர்

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

*Value Added CoConut*

KKSSS சார்பில் ***Value Added CoConut*** எனும் தலைப்பில் ஒருநாள் பயிற்சி முகாம் கல்லுவிளை ஆசிர் அரங்கத்தில் வைத்து ஜூலை 7 ஆம் தேதி நடைபெற்றது. இது KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை மகேஷ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக கிஸான் விகாஸ் கேந்திரா (KVK) பேராசிரியர் முனைவர் செல்வ ராணி அவர்கள் கலந்து கொண்டு, தென்னை மரம் முழுமையாகவே பயன் நிறைந்ததாக காணப்படுகிறது. இதன் காய் ஓடு, நார், தண்டு என எல்லா உறுப்புகளும் பயன்படுகிறது. சங்க நூல்கள் தெங்கு என்றும் கூறும் இம்மரத்தின் அதன் பயன்கள், வளர்ப்பு முறை, தென்னை வகை, தட்பவெப்பம் ஆகியவற்றைப் பற்றி கூறினார். தொடர்ந்து குமரி வேளாண் பெறியியல் அலுவலர் திருமதி குறட்டி அவர்கள் கலந்து கொண்டு வேளாண் விளைபொருட்களின் விலை நிர்ணயம், அரசின் சலுகைகள் பற்றி கூறினார்கள். இதில் 35 நபர்கள் கலந்து கொண்டனர்.



***மருத்துவ முகாம்***

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், மற்றும் ஆற்றூர் மரியா மருத்துவக்கல்லூரி இணைந்து நடத்திய சித்த மருத்துவ முகாம் மருதம்பாறை புனித ஆன்டனி சமுகநலகூடத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சி KKSSS இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மரியா சித்த மருத்துவ கல்லூரி பேரா. மருத்துவர் விஜிலா ராணி,

மருத்துவர் ஜெருஷ் அலெக்ஸ மற்றும் மருத்துவர் கோபால கிருஷ்னண் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள. இதில் ஆண்கள், பெண்கள, குழந்தைகள் என 84 பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இலவச பரிசோதனை செய்யப்பட்டு இலவச மருந்தும் அளிக்கப்பட்டது. இதில் 3 மருத்துவர்கள் உட்பட 20 பயிற்சி மருத்துவர்களும் கலந்து கொண்டனா. இந்நிகழ்வை துணை இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆன்றனி தலைமையில் பத்துகாணி சுய உதவி மகளிர் ஒருங்கிணைத்தார்கள்.

### ஆரி மற்றும் தையற்கலை

Migration திட்டத்தின் மூலம் KKSSS மற்றும் மஞ்சாலுமூடு, லிட்டில் ப்ளவர் திறன் வளர் மையம் இணைந்து ஆரி மற்றும் தையற்கலை ஒரு மாத




முழு நேர பயிற்சி முகாம் பள்ளிக்கோணம், திருஇருதய அரங்கத்தில் வைத்து ஜூலை 5 தேதி முதல் நடைபெற்று வருகிறது. தொடக்க கூடத்தின் போது, KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமை ஏற்றார். மஞ்சாலுமூடு, லிட்டில் ப்ளவர் திறன் வளர் மையம் இயக்குநர் பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில், பள்ளிக்கோணம் திருஇருதய ஆலய பங்குதந்தை லூக்கா கொல்லம்பறம்பில் மற்றும் KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆன்டணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமையுரையின் போது இயக்குநர் அவர்கள், பொதுவாக பெண்களை பொறுத்தவரை தனக்கு திருமணம் என்றாலும் சரி உறவினர் திருமணம் என்றாலும் சரி பெண்களுக்கு இருக்கும் ஒரே கவலை புடவை மற்றும் ப்ளவுஸ் என்ன மாடல் தைக்கலாம் என்பது தான். புடவை விலையை விட தையல் மற்றும் ஆரி வேலைகளுக்கு ஏராளமாக செலவு செய்கின்றனர். எந்த டிசையின் ப்ளவுஸ் துணி தைக்கலாம் என யோசிக்கும் பெண்களுக்கு இந்த பயிற்சி பயனுள்ளதாக இருக்கும் என கூறினார். தொடர்ந்து பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் ஆசீர்வதித்து துவங்கி

வைத்தார். திறன் வளர் மையம், லிட்டில் ப்ளவர் திறன் வளர் மைய அலுவலர் ஆசிரியர் வில்சன் மேற்பார்வையில் தையற் மற்றும் ஆரி கலை ஆசிரியர் ஸ்ருதி அவர்களால் 28 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்ச்சியினை ஜூலை 26 அன்று TASOSS Migration திட்ட அலுவலர் திருமதி கீதா பார்வையிட்டார்கள். இந்த பயிற்சி முகமானது ஆகஸ்ட் 6 தேதி நிறைவுறுகிறது.

***நன்றியும் அறிமுகமும்***

கடந்த இருப்பந்தைந்து வருடங்களாக கன்னியாகுமரி சமூக சேவை



சங்கத்தின் களப்பணியாளராக களியல் மற்றும் மறப்பாடி பகுதிகளில் பணியாற்றி வந்த திருமதி சரோஜினி அவர்கள் ஓய்வு பெற்றுள்ளார். வளர்ச்சி பணிகளை செவ்வனே செய்து ஏழை எளியோரின் நல்வாழ்விற்காக தனது பணிகளை திறம்பட பணியாற்றிய அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம். புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் திருமதி ராஜம் அவர்களுக்கு அனைத்து வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்

செயலர்

| FEASTDAYS OF REV. FATHERS - AUGUST - 2022 | |
|---|---|
| Fr. Anil Raj Dominic | 08 |
| Fr. Augustine Thalodil | 28 |
| Fr. Tobin Alapurackal | 28 |

## தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம்
## Thuckalay Youth Educational Services in Collaboration with Trichy Vazhikatti

***மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்***

சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து ஜூலை 30 ஆம் தேதி சனிக்கிழமை வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது. திருச்சி தொன்போஸ்கோ வழிகாட்டி நிறுவனமும், தக்கலை இளையோர் கல்வி சேவை மையமும், புனித அல்போன்சா கல்லூரியும் இணைந்து இவ்மாபெரும் வேலைவாய்ப்பு முகாமை நடத்தின.

இதில் 1000 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். BPO, டெய்லரிங், சாப்ட்வேர், டேட்டா என்ட்ரி, ஆட்டோ மொபைல், பேங்கிங் செக்டார், பார்மசி, கோர் ரிலேட்டேட், மெடிக்கல் கோடிங், ஹோட்டல் மேனேஜ்மென்ட் போன்ற துறைகளில் 300 க்கும் அதிகமானோர் வேலை வாய்ப்பைப் பெற்றனர். வேலை வாய்ப்பைப் பெற்றோர் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், விருதுநகர், கன்னியாகுமரி முதலிய நகரங்களில் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்றும் கலந்து கொண்டவர்களுக்கும், வேலை வாய்ப்பைப் பெற்றவர்களுக்கும் கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ், கல்லூரி கல்வி இயக்குனர் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி, முதல்வர் முனைவர் எஸ். இசையாஸ், துணை முதல்வர் ஆர். சிவனேசன், தக்கலை இளையோர் இயங்க இயக்குனர் அருட்தந்தை.சந்தோஷ், அருட்தந்தை ஜோஷி ஆகியோர் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். அத்துடன் பலரும் பயன் பெறும் வண்ணம் இத்தகைய சிறப்பு மிக்க வேலை வாய்ப்பு முகாமை நடத்திய கல்லூரிக்கும், தக்கலை இளையோர் கல்வி சேவை மையத்திற்கும் (TYES), திருச்சி தொன்போஸ்கோ வழிகாட்டி மையத்திற்கும், கலந்து கொண்ட வேலை வாய்ப்பு நிறுவனங்களுக்கும், வேலை வாய்ப்பைப் பெற்றுப் பயனடைந்த பயனாளர்களுக்கும் தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

ஸ்டார்வின்

ஒருங்கிணைப்பாளர்

# மறைமாவட்டச் செய்திகள்

## மார்த்தோமா மாதம் நிறைவு

திருத்தூதர் மார்த் தோமா இரத்த சாட்சியாக மாறியதன் 1950 ஆண்டை முன்னிட்டு ஒருமாத கால கொண்டாட்டமானது ஜூன் 5 ஆம் தேதி மறைமாவட்ட அளவிலும் பங்களவிலும் முன்னெடுக்கப்பட்டது. அதன் நிறைவு ஜூலை 3 ஆம் தேதி நடைபெற்றது.

## காக்கனாடு சென்ட் தோமஸ் மவுண்டில் திருஅவை தின கொண்டாட்டம்

ஜூலை 3 ஆம் தேதி நடைபெற்ற இவ்விழாவில் நம்முடைய மறைமாவட்டத்திலிருந்து, அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல், அருட்சகோதரிகள் ரோஸ் மார்ட்டின் SABS, பாவனா CMC, ஜூலியட் FCC, திருமதி லதா மற்றும் திரு ஷோனிக் ரீகன் ஆகியோர் பங்கேற்றனர்.

## இளங்குருக்களுக்கான தொடர் பயிற்சி

2022, ஜூலை 14 ஆம் தேதி சங்மத்தில் வைத்து காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை நமது மறைமாவட்டத்தின் இளம் குருக்களுக்கான ஒரு நாள் தொடர் உருவாக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.. குழித்துறை மறைமாவட்ட பொருளர் தந்தை அகஸ்டின் அவர்கள் பயிற்சியை அளித்தார்.



## மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான கூட்டம்

மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான இரண்டாம் பிரிவு கூட்டம் 15 ஜூலை 2022 அன்று ஆயர் இல்லத்தில் மதியம் 2.00 மணிக்கு நடைபெற்றது. இதில் சீனாய் தியான இல்லம், சீனாய் இறையியல் மையம், கிறிஸ்தவ ஒன்றிப்பு, AIDACT, மரியாயின் சேனை, புலரி கம்யூனிகேஷன்ஸ், புலரி அச்சகம், கிறிஸ்மா புனித பொருட்கள் விற்பனை மையம், இறையருள் இதழ், சீனாய் இதழ், கிறிஸ்தவ நல்வாழ்வு இயக்கம் மற்றும் திருவழிபாட்டுப் பாடல்கள் ஆகிய துறைசார்ந்த இயக்குநர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றார்கள். ஆயர் தலைமையேற்ற கூட்டத்தில், துறைகளின் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

## காரோட்டில் தேவசகாயம் பிள்ளை குருசடி மந்திரிப்பு

புனித தேவசகாயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு குருசடி காரோடு டி.என்.என் இல்லத்தின் புற நுழைவாயிலின் எதிரில், 16 ஜூலை 2022 அன்று மாலை 6.00 மணிக்கு மந்திரித்துத் திறந்து வைக்கப்பட்டது. இது தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தின் நுழைவாயிலில், அமைந்துள்ளது. இந்நிகழ்வில், கூரியா உறுப்பினர்கள் மற்றும் மறைமாவட்டத்திலிருந்து ஏராளமான தந்தையர்கள் கலந்து கொண்டனர். அருட்தந்தை அஜீஷ் அட்டியில் குருசடி அமைக்க முயற்சி எடுத்தார்.



## இளங்குருமடத்திற்கு புதிய அதிபர் தந்தை

2022, ஜூலை 16 அன்று முக்கூட்டுக்கல் புனித மரியா இளங்குருமடத்தின் புதிய அதிபராக அருட்தந்தை ஜோஜி மரங்காட்டு CMI அவர்கள்

பதவியேற்றார். ஆவணக்காப்பாளர் நியமன ஆணையை வாசித்தார். இதில் திருவனந்தபுரம், CMI மாகாணத்தின் மாகாண அருட்தந்தை செபாஸ்டியன் சாமத்தரா CMI விழாவிற்கு வந்திருந்தார். நிகழ்விற்கு மஞ்சாலுமூடு மறைவட்டத்தை சேர்ந்த தந்தையர்களும், நமது மறைமாவட்டத்தில் பணிபுரியும் CMI தந்தையர்களும் வந்திருந்தனர்.



## கைக்காரர்கள் மற்றும் பொருளர்களுக்கான கூட்டம்

மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்ளில் உள்ள கைக்காரர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான வருடாந்திர கூட்டம் மற்றும் வழிகாட்டுதல் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை, 17 ஜூலை 2022 அன்று சங்கமத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சி காலை 9.30 மணிக்கு தொடங்கி மாலை 4.00 மணிக்கு நிறைவடைந்தது. பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் தலைமையில் திருப்பலியுடன் நிகழ்ச்சி தொடங்கியது. பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் மற்றும் அருட்தந்தை ஜோன்சிலால் ஆகியோர் வருகை புரிந்தனர். கைக்காரர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி விவாதிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் சுமார் 100 பேர் பங்கேற்றனர்.

## பொன்விழா கொண்டாட்டம் மாங்கரை

மாங்கரை புனித வியகப்பர் தேவாலயம் 2022 இல் அதன் 50 ஆண்டுகளை நிறைவு செய்தது. 30 ஜூலை 2022 சனிக்கிழமையன்று, ஆயர் தலைமையில் நன்றி திருப்பலி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 24 ஜூலை 2022 அன்று, ஆலயத்தின் புதுப்பிக்கப்பட்ட மதுபாஹா ஆசீர்வதிக்கப்பட்டது. அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## சூசைபுரம் கல்லூரியில் புனித அல்போன்சா விழா

சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரியில் 27 ஜூலை 2022 அன்று மதியம் 2.00 மணிக்கு புனித அல்போன்சா விழா கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமை தாங்கினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் உடனிருந்தார். கல்வியியல் இயக்குனர் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி சிறப்புரை ஆற்றினார். தாளாளர் தந்தை ஆன்டணி ஜோஸ், முதல்வர் டாக்டர் இசையாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.




## புனித அல்போன்சா பெருவிழா கொண்டாட்டங்கள்

புனித அல்போன்சா பெருவிழா கொண்டாட்டம் நாகர்கோவில் புனித அல்போன்சா ஆலயத்தில் 22 ஜூலை 2022 அன்று தொடங்கியது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் கொடியேற்றினார். புனித அல்போன்சாவின் நவநாள் மற்றும் ஆடம்பர திருப்பலி என பத்து நாட்கள் கொண்டாடபட்டது. ஜூலை 28, 2022 அன்று, தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு A. ஸ்டீபன் அவர்கள் சிறப்பு திருப்பலி நிறைவேற்றினார். திருவிழாவின் கடைசி நாளான 31 ஜூலை 2022 அன்று, காலை 9.30 மணிக்கு  குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் புனித அல்போன்சாவின் நவநாள் நடத்தினார். அதனைத் தொடர்ந்து  ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. திருப்பலியின் நிறைவில் திருப்பவனி நடைபெற்றது. இறைமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### ▶ புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு



புனித மரிய கொரற்றி ஆலயத் திருவிழா 2022 ஜூலை 6 - ம் தேதி புதன்கிழமை முதல் 10- ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. முதல் நாள் மாலை 6 மணிக்கு பங்குத்தந்தை மாத்யு தெக்கேகூற்று அவர்கள் திருக்கொடி ஏற்றினார்கள். திருவிழா நாட்களில் மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும், அதைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. கடைசி நாளன்று காலை 9 மணிக்கு இராசை திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை 6 மணிக்கு பக்தி இயக்கங்களின் ஆண்டு விழாவும் நடைபெற்றது.

### ▶ புனித சூசையப்பர் ஆலயம், வளன்நகர்

புனித சூசையப்பர் ஆலயம் குந்நு விளையில் 3.7.2022 அன்று புனித தோமையார் திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது விழாவிற்கு சிறப்பு விருந்தினராக சீரோ மலபார் திரு அவையின் திருத்தூது விண்மீன் திரு. மரியதாஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

8.7.2022 அன்று மாதர் ஜோதிஸின் புதிய அலகு துவங்கப்பட்டது. இக்கூட்டத்தில் 15 தாய்மார்கள் கலந்து கொண்டார்கள். துவக்க விழாவிற்கு தக்கலை மறை மாவட்ட இல்வாழ்வு இயக்க இயக்குனர் அருட்தந்தை ஜிம்மி அவர்கள் வருகை தந்து, மாதர் ஜோதிஸின் சட்டவரைவுகளை எடுத்துக் கூறி புதிய அலகை குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார்.

- **புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் – கழுவந்திட்டை**

ஜூலை 3 தோமையார் திருநாள் அன்று ஆடம்பர திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பங்குத்தந்தை ஜெஸ்டின் அவர்கள் தலைமையில் மிஷன் லீக் குழுக்கள் சார்பாக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. 12.7.2022 அன்று இயற்கை மருத்துவ முகாம் பங்கின் சார்பாக நடைபெற்றது.

- **புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு**

ஜூலை 3 அன்று தோமையார் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும் அல்போன்சா சிறப்பு திருப்பலி மற்றும் நவநாள் 9 நாட்கள் ஏறெடுக்கப்பட்டன. அது ஜூலை 22 ஆம் தேதி தொடங்கி ஜூலை 30 ஆம் தேதி வரை நடத்தப்பட்டது.

## மஞ்சாலுமூடு

- **புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு**

முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தில் புனித தோமையாரின்



திருவிழா மற்றும் பங்குத் திருவிழா கொண்டாடப்பட்டது. 3.7.2022 முதல் 10.7.2022 வரை தினமும் மாலை 5:30 மணிக்கு ஜெபமாலை, புகழ் மாலை மற்றும் திருப்பலி நடைபெற்றது. 3.7.2022 அன்று ராசா திருப்பலி நிறைவேற்றப்பட்டது. 7.7.2022 ஆயர் தலைமையில் திருப்பலி மற்றும் நற்கருணை, உறுதிபூசுதல் ஆகிய திருவருட்சாதனங்கள் 15 மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

### திருச்சிலுவை ஆலயம் – மாலைக்கோடு

மாலைக்கோடு, திரு சிலுவை ஆலயத்தில் 23.07.2022 முதல் 31.07.2022 வரை கோதமங்கலம் SABS அருட் சகோதரிகள் ஆலயத்தின் அனைத்து வீடுகளும் சந்தித்தார்கள்



### புனித பெனடிக்ட் ஆலயம் – பென்கிரி

பென்கிரி, புனித பெனடிக்ட் ஆலயத்திருவிழா 06.07.2022 அன்று கொடியேற்றுதலுடன் ஆரம்பமானது. பங்குத்தந்தை அருட்தந்தை செபாஸ்டின் ஐய்க்கரகுந்நேல் அவர்கள் திருகொடியேற்றி துவக்கி வைத்தார். 06.07.2022 முதல் 08.07.2022 வரை சீனாய் தியானக் குழுவினரின் தியானம் நடைப்பெற்றது. 10.07.2022 அன்று ஆலய குடும்பவிழா நடைபெற்றது. அன்றைய தினம் ராசா திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கியவர் முன்னாள் பங்குத்தந்தை

ஜேம்ஸ் பன்னாங்குழி OSB அவர்கள். தொடரந்து திருப்பவனி அதன்பின் அன்பின்விருந்து நடைபெற்றது. 11.07.2022 அன்று இறந்தவர்களுக்கான திருப்பலிக்கு பின் திருக்கொடி இறக்கி திருவிழா நிறைவு பெற்றது.

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு.

மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தில் புனித தோமையார் பாரதம் வந்து 1950 ஆண்டுகள் நிறைவு விழாவும் துக்ரானா திருநாளும் கொண்டாடப்பட்டது. விழாவானது 01.01.2022 முதல் 3.07.2022 வரை நடைபெற்றது. 01.7.2022 அன்று திருப்பலி மற்றும் விவிலிய கன்வென்ஷன் நடைபெற்றது. தொடர்ந்து சிற்றுண்டி வழங்கப்பட்டது. 02.07.2022 அன்று மாலை திருப்பலி தொடர்ந்து புனித தோமையாரின் மலையாள திரைப்படம் திரையிடப்பட்டது. 03.07.2022 அன்று காலையில் காலை செபம், தொடர்ந்து துக்கிரானா திருநாள் கொண்டாடும் விதமாக ஆடம்பரத்திருப்பலி நடைப்பெற்றது. அன்று மாலை குடும்பவிழா கொண்டாடப்பட்டது. பின் சிற்றுண்டி வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவுபெற்றது. இவ்விழா அனைத்தையும் பங்குதந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

### திருக்குடும்ப ஆலயம் – முக்கூட்டுகல்

முக்கூட்டுகல், திரு குடும்ப ஆலயத்தில் 24.07.2022 அன்று அருட்



தந்தை சுபின் அவர்கள் தலைமையில் முதியோர் தின விழா கொண்டாடப்பட்டது.

## தக்கலை–பிலாங்காலை

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

ஜூலை மாதம் 3 ம் தேதி துக்ரானா திருநாள் ஆடம்பர திருப்பலி பங்குத்தந்தையின் தலைமையில் நடைபெற்றது. திருப்பலி முடிந்த உடன் பங்குதந்தை தோமஸ் தெக்கேத்தலா பெயர்கொண்ட திருவிழா பங்களவிலும் மறைக்கல்வி நிலையம் சார்பாகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 24 ஆம் தேதி முதியோர் தினம் அனுசரிக்கப்பட்டது. அன்றைய தினம் குழந்தை ஈசோ இயக்கம் தொடக்கவிழா சிறப்பிக்கப்பட்டது. குழந்தை ஈசோ இயக்கம் பிள்ளைகளுக்கும் ஜெபமாலை மற்றும் உத்திரியம் பங்குத் தந்தை பரிசாக வழங்கினார். புனித அல்போன்சாம்மாவின் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தில் 10 நாட்கள் மாலை 6 மணிக்கு திருப்பலி மற்றும் 9 நாள் நவநாள் நடைபெற்றது. 10 ஆம் நாள் அன்று புனித அல்போன்சம்மாவின் தேர்பவனி ஆலயத்தில் தொடங்கி அருட்சகோதரிகள் இல்லம் வரை சென்று முடிவடைந்தது.




### புனித சவேரியார் ஆலயம் – கைசாலவிளை

ஜூலை மாதம் 3 ம் தேதி துக்ரான திருநாள் அன்று ஆடம்பர

திருப்பலி நடைபெற்றது. பங்குதந்தையின் குருத்துவ அருட்பொழிவின் வெள்ளிவிழா ஜூலை மாதம் 17ம் தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## களியல்

### ▶ புனித சூசையப்பர் தேவாலயம் – காரோடு

தோமையார் மாத நிறைவு விழா கொண்டாட்டம் மற்றும் பங்குதந்தையின் பெயர் கொண்ட விழா ஜூலை 3 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. காலை 7 மணிக்கு, காலைஜெபம் அதைத்தொடர்ந்து ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து மறைக்கல்வி மாணவர்கள் தலைமையில் கலைநிகழ்ச்சிகள் மற்றும் தோமையார் மாத நிறைவு விழா கொண்டாட்டம் நடைபெற்றது. இதில் பங்குத்தந்தை தலைமை தாங்கினார். மறைக்கல்வி தலைமையாசிரியர் திரு. பிபின், அருட்சகோதரி அகதா DSS மற்றும் அருட்சகோதரி செலின் SDS ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக திருமதி





டெய்சி அவர்கள் பங்குதந்தைக்கு நினைவு பரிசு வழங்கி வாழ்த்துரை வழங்கினார். ஆசிரியர் திரு புஷ்பராஜ் மலர்கொத்து கொடுத்து பங்குதந்தைக்கு வாழ்த்து தெரிவித்தார். அதைத் தொடர்ந்து அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

முதியோர் தின கொண்டாட்டம் ஜூலை மாதம் 24 ஆம் தேதி

பங்கில் நடைபெற்றது. காலை 7.00 மணிக்கு திருப்பலியும் பின்னர் அனைத்து முதியவர்கள் முன்னிலையிலும் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கப்பட்டது. மேலும் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

- **புனித இரண்டாம் ஜான்பால் ஆலயம் – குலசேகரம்**

2022 ஜூலை மாதம் 3ம் தேதி குலசேகரம் புனித இரண்டாம் ஜான்பால் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்தந்தை.ஜோஸ் தலைமையில் காலை 10 மணி அளவில் திருப்பலி ஆரம்பமானது திருப்பலி நிறைவடைந்த பிறகு புனித தோமையாரின் திருநாளான துக்ரானா திருநாளை முன்னிட்டு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் புனித தோமையாரை குறித்த பாடல்கள், நடனம், நாடகம் இடம்பெற்றது துக்ரானா திருநாளை ஒட்டி நடத்தப்பட்ட இறைவார்த்தை பகிர்வு, பேச்சுப்போட்டி , வினாடிவினா இவைகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது பங்குதந்தை அருட்தந்தை.ஜோஸ் அவர்கள் வாழ்த்துக்கள் கூறி நன்றி தெரிவித்தார். பாப்பரசர் கீத்த்துடன் விழா இனிதே நிறைவடைந்தது. பின் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

## தூசைபுரம்

- **கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்**

ஜூலை 3 'துக்ரான திருநாள்' பங்கு அளவில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. போட்டிகள், திருப்பலி என விமரிசையாக நடந்த திருவிழாவில் மூன்று விதமான போட்டிகள், புனித தோமையார் குறித்த மையச் சிந்தனையின் நடைபெற்றது.

1. விவிலிய வசனம் சொல்லுதல் (குழந்தை ஈசோ இயக்கம் சார்பில்)

2. மாறுவேடப்போட்டி & 3. குறு நாடகம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றன. அன்றைய திருப்பலி கட்டடக் கலைஞர்களுக்காக சிறப்பாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

ஜூலை 20-ஆம் நாள் தொடங்கி சுமார் எட்டு நாள்கள் புனித அல்போன்சா நவநாள் பங்கு அளவில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அத்தோடு 10 நாட்கள் நோயாளிகளுக்காக மாலை ஐந்து மணிக்கு சிறப்பு ஜெபமாலை நடைபெற்றது.

ஜூலை 24-ஆம் நாள் பங்கில் தாத்தா பாட்டிகள் தினம்

கொண்டாடப்பட்டது. சுமார் 19 தாத்தா பாட்டிகள் இந்த நிகழ்வில் பங்கெடுத்தார்கள். சிறப்பு திருப்பலி நடைபெற்றது. பேரப்பிள்ளைகள் பூ மற்றும் பரிசு கொடுத்தும் அவர்களை வரவேற்றார்கள். அவர்களுக்கான ஒரு பொதுக்கூட்டம் பங்குத்தந்தை ஜாண் பால் தலைமையில் நடந்தது.



ஜூலை 30ஆம் தேதி பங்கு பேரவைக் கூட்டம் நடைபெற்றது. அதில் பங்கில் நடைபெறும் குலுக்கல், இளையோர் இயக்கச் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் அல்போன்சா திருத்தலம் நோக்கிய பயணம் போன்றவை பற்றி விவாதிக்கப்பட்டது. அடுத்தநாள் அல்போன்சா திருப்பயணம் நடைபெற்றது. அதில் பங்கிலிருந்து சுமார் 100 க்கும் அதிகமான மக்கள் சென்று திருப்பலியில் பங்கெடுத்தார்கள்.

### தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

ஜூலை மாதம் 22 ம் தேதி காலை 4 மணி முதல் 23 ம் தேதி இரவு 8 மணி வரை 40 மணி நேர ஆராதனை நடைபெற்றது, பங்குதந்தை சாஜன் அவர்கள் வழிநடத்தினார். 29.07.2022 அன்று மாலை 6 மணிக்கு புனித அல்போன்சா திருநாள்





கொண்டாடப்பட்டது, திருப்பலி, நவநாள், நற்கருணை ஆராதனை மற்றும் அன்பின் விருந்து நடைபெற்றது

## நித்திரவிளை

### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் புனித தோமையார் திருநாள் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. 3-7-2022 அன்று காலை அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் தலைமையில் ஆடம்பர இராசா திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்கு பின் அனைத்து மக்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

மாலை 3 மணிக்கு 'அன்பகம்' முதியோர் இல்லத்தில் வைத்து மாதர் ஜோதிஸ் தாய்மார்கள் சார்பில் பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் மாதர் ஜோதிஸ் அனிமேட்டர் Sr. ராணி மேரி.S.D அவர்கள் முன்னிலையில் அனைத்து தாய்மார்களும் இணைந்து தோமையார் தினம் கொண்டாடினர்.

ஜூலை 17- ம் தேதி குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. எல்லா குழந்தை ஈசோ பிள்ளைகளுக்கும் சிறப்பு ஜெப வழிபாடு நடைபெற்றது பின் அனைத்து குழந்தைகளுக்கும் 'உத்திரியம்' வழங்கினார் தந்தை அவர்கள்.

தாத்தா பாட்டி (முதியோர்) தினம் அன்று அனைத்து முதியோர்களுக்காகவும் திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்கள். மேலும் எல்லா வியாழக்கிழமைகளிலும் நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் ஒப்பு கொடுக்கப்படுகிறது.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

ஜூலை - 3 காலைத் திருப்பலிக்குப் பின் புனித தோமையார் தினம் மறைக்கல்வி சார்பில் கொண்டாடப்பட்டது. அனைத்து மறைக்கல்வி மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். ஜூலை 15- ம் தேதி பங்கு தந்தை அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஜூலை 28 - ம் தேதி புனித அல்போன்சா திருநாளை முன்னிட்டு 9 நாட்கள் நவ நாளும் திருப்பலியும் நடைபெற்றது. நற்கருணை ஆராதனை வழிபாடும் நடைபெற்றது. எல்லா நாட்களும் நேர்ச்சை இனிப்பு வழங்கப்பட்டது. அனைத்து இறைமக்களும் இப்பக்தி முயற்சியில் முழுமையாக பங்கு கொண்டு ஜெபித்து அன்னை அல்போன்சாவின் அருள் பெற்று சென்றனர்.

- **புனித அந்தோணியார் ஆலயம் – வயலங்கரை.**

ஜூலை 15-ம் தேதி திருப்பணியாளர்கள் அனைவரும் Happyland -க்கு இன்பச் சுற்றுலா சென்று மகிழ்ந்தனர். ஜூலை 16 ஆம் தேதி குழந்தை ஈசோ தினமும் காமராஜர் தினமும் சேர்ந்து கொண்டாடப்பட்டது. சிறு குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, இறுதியில் பங்குத்தந்தை ரோபின்ஸ் அனைவருக்கும் உத்திரியம் வழங்கினார்.

ஜூலை 23ஆம் தேதி அல்போன்சா திருத்தலத்திற்கு நடைபயணம் மேற்கொண்டனர் இளைஞர்கள். ஜூலை 31 ஆம் தேதி பங்கு மக்கள் அனைவரும் புனித அல்போன்சா திருத்தலத்திற்கு புனித பயணம் மேற்கொண்டு புனிதையின் அருள் பெற்று இல்லம் சென்றனர்.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

| BIRTHDAY OF REV. FATHERS- AUGUST- 2022 | |
|---|---|
| Fr. James Kanakalil | 4 |
| Fr. Rejesh Vayalumkal MCBS | 9 |
| Fr. Robins Kuzhikodil | 14 |

## இதர செய்திகள்

- தலச்சேரி மாகாணத்தில் இருந்து SABS அருட்சகோதரிகள், பளுகல் பங்கில் ஹோம் மிஷன் நடத்துவதற்கு, நவம்பர் மாதத்தில், நமது மறைமாவட்டத்திற்கு வருகை புரிவார்கள்.

- சங்ஙனாச்சேரி மாகாணத்தைச் சேர்ந்த SABS அருட்சகோதரிகள் தூத்துக்குடியின் சில கிராமங்களை சந்தித்தனர். சந்திப்பின் இறுதிநாளான 31 ஜூலை 2022 அன்று ஒரு நாள் மருத்துவ முகாமை ஏற்பாடு செய்தனர்.

- இடுக்கி மாகாணத்தின் FCC அருட்சகோதரிகள் விருதுநகர் மிஷனில் தங்கள் இறைபணியை தொடங்கியுள்ளனர். அவர்கள் ஒரு வாடகை வீட்டில் தங்கி பணிகளை ஆரம்பித்துள்ளனர். அது ஆகஸ்ட் 10 தேதி அன்று மந்திரிக்கப்படும். இடுக்கி மாகாணம் நமது மறைமாவட்டத்தில் மேற்கொள்ளும் இரண்டாவது பணி இதுவாகும்

- சீரோ மலபார் ஆயர் பேரவை (SYNOD) ஆகஸ்ட் 16 முதல் ஆகஸ்ட் 26 வரை நடைபெறவுள்ளது.

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| வியன்னி நாள் கொண்டாட்டம், இளங்குருமடம் | - ஆக. 04 |
| FCC கன்னியர் இல்ல அர்ச்சிப்பு, விருதுநகர் | - ஆக. 10 |
| சீரோ மலபார் ஆயர்பேரவை | - ஆக.16- 26 |
| **மறைவட்ட அளவில் குருக்களுக்கான கூட்டம்** | |
| சூசைபுரம், தக்கலைபிலாங்காலை மறைவட்டம் | - ஆக. 16 |
| மஞ்சாலுமூடு, களியல், ஆறுகாணி மறைவட்டம் | - ஆக. 18 |
| படந்தாலுமூடு நித்திரவிளை மறைவட்டம் | - ஆக. 20 |
| அருட்தந்தையர் பேரவை | - ஆக. 30 |

## BISHOP'S ENGAGEMENTS AUGUST 2022

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 09.00 am | >> Poondi TOT Health Care Meeting |
| 2 | Tue | 07.00 am | Poondi TOT Health Care Meeting |
| 3 | Wed | | Poondi TOT Health Care Meeting |
| 4 | Thu | 09.30 am<br>03.30 pm | Mukootukal: John Mariya Vianney celebration at Minor Seminary<br>Curia Meeting |
| 5 | Fri | 07.30 am<br>02.30 pm | Sangamam: Consulters meeting<br>Sangamam: College GB meeting |
| 6 | Sat | 04.00 pm | Kottayam : Kudamaloor parish Feast day Conclusion |
| 7 | Sun | 07.00 am<br>11.00 am | Kottayam: Kudamaloor Feast and Institution of St. Devasagayam Relics<br>Kottayam: Requiem Qurbana for Benefactor |
| 8 | Mon | 06.00 pm | Nithravilai: Parish Feast Holy Qurbana and First Holy Communion |
| 9 | Tue | 05.30 pm | Killiyoor: Marian Devotion |
| 10 | Wed | 02.30 pm | Viruthunagar: FCC House Blessing |
| 11 | Thu | 10.00 am<br>06.00 pm | Bishop's House: Meeting with Priests (Resourse persons)<br>Mukootukal: Minor Seminary Visit |

| | | | |
|---|---|---|---|
| 12 | Fri | 05.30 pm | Plankarai: Feast Day Holy Qurbana |
| 13 | Sat | 09.30 am<br>06.30 pm | Sangamam: Pastoral Council Meeting<br>Bishops House: Meeting with Friends from Germany |
| 14 | Sun | 09.00 am<br>05.00 pm | Thettiyodu: Golden Jubilee Conclusion Holy Qurbana<br>Thenkasi Mission: Angels' Meet |
| 15 | Mon | 09.00 am | Paramanvilai: Parish Feast Holy Qurbana<br>>> Kakanad for Synod |
| 16 | Tue | | Kakanad: Synod Begins |
| 17 - 26 | Wed | | Synod |
| 27 | Sat | 10.00 am | Kakanad: Synod Ends |
| 28 | Sun | 06.30 am<br>06.00 pm | Chembagatharisu: Feast Day Holy Qurbana<br>Arukani: Blessing of Church main door |
| 29 | Mon | 06.30 am<br>10.00 am | CMC Thuckalay: Feast Day Holy Qurbana<br>Curia Meeting |
| 30 | Tue | 09.30 am | Sangamam: Presbyteral Council |
| 31 | Wed | 09.30 am | Muzhucode: Marriage Holy Qurbana |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



*Mathar Jyothis Inauguration, Kalluvilai 16/07/2022*



*Mission League Inauguration, Padanthalumoodu 17/07/2022*




*TYES & St. Alphonsa College, Job Fair, 31/07/2022*




*Catechism Anniversary, Felicitating the Teachers who Completed 25 Years of Service in Catechetics, Padanthalumoodu, 17/07/2022*



*Training for the Kaikars and Accountants, Sangamam, 17/07/2022*

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570